# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

# ஆண்டு - 3 (Year 3)

1/09/2016 - 31/08/2017 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

## போட்டி நடைபெறும் திகதி 09/11/2024

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

## வருடப் பிறப்பு

சித்திரை மாதம் முதலாம் நாள் புதுவருடம் பிறக்கும். வருடப் பிறப்பிற்கு முதல் நாளில் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து வீட்டை அலங்கரிப்போம். கோலம் போடுவோம். பலகாரம் சுடுவோம்.

வருடப்பிறப்பு அன்று அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து மருத்துநீர் வைத்து நீராடுவோம். புதிய ஆடைகள் அணிவோம். குத்துவிளக்கு ஏற்றி கடவுளை வணங்குவோம். கோயிலுக்குச் செல்வோம்.

பெற்றோரை வணங்கி ஆசி பெறுவோம். நல்ல நேரத்தில் கைவிசேடம் வாங்குவோம். விருந்தினரை உபசரித்து வாழ்த்துக்கள் கூறி விருந்து உண்போம். தானதருமம் செய்வோம். நண்பர்களுடன் சேர்ந்து விளையாடி மகிழ்வோம்.